வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 26.06.2026 வெள்ளிக்கிழமை | இதழ் : 171 | பக்கங்கள் : 08

# பயங்கரவாத சட்டத்துக்கு முடிவு கட்டுவோம்! குற்றவாளிகள் எவராயினும் தப்ப முடியாது!!

## சபையில் ஜனாதிபதி அதிரடி அறிவிப்பு



கொழும்பு, ஜூன். 26

"பொதுமக்களின் சொத்துக்களை கொள்ளையடித்து, ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்குவது இந்நாட்டு பொதுமக்களின் எதிர்பார்ப்பாகும். தற்போதைய அரசாங்கம் அந்த பொதுமக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றும் ஒரு அரசாங்கம். எந்தவொரு குற்றமும் காலப்போக்கில் மறைந்துபோக இடமளிக்கப் போவதில்லை. குற்றவாளிகளை முறையாக சட்டத்தின் முன் நிறுத்தும் பொறுப்பு நிறைவேற்றப்படும்."

- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இந்த ஆண்டுக்குள் இரத்து செய்யப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை ஒடுக்குவது குறித்த பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் நிலவும் ஊழல், திட்டமிடப்பட்ட குற்றங்கள், போதைப்பொருள் கடத்தல் மற்றும் அரச அனுசரணையுடன் இடம்பெற்ற அரசியல் குற்றங்கள் அனைத்தும் இரும்புக்கரம்

07

2.5 மில்லியன் டொலர் கொள்ளை:

# தனது பொறுப்பில் இருந்து நழுவுகிறதா மத்திய வங்கி?

## பாராளுமன்றத்தில் ரவூப் ஹக்கீம் கேள்வி

கொழும்பு, ஜூன். 26

பெரும் சர்ச்சை ஏற்படுத்திய 2.5 மில்லியன் டொலர் மத்திய திறைசேரி பணக் கொள்ளைக்கான பொறுப்பை மத்திய வங்கி ஏற்கவேண்டியதில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

07

# இன்னும் எத்தனை நாள்கள் நாம் நீதிக்காக காத்திருப்பது?

## உறவுகளின் போராட்டத்தை அரசியல் என கருதவேண்டாம் என்கிறார் சாணக்கியன்



கொழும்பு, ஜூன். 26

செம்மணி மனிதப் புதைகுழி பகுதியில் இருந்து முழுமையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள 409 எலும்புக்கூடுகள் தொடர்பான விசாரணைகளை விரைவுபடுத்த வேண்டும். இன்னும்

07

# செம்மணி புதைகுழி விவகாரத்தில் சர்வதேச ஒத்துழைப்பு பெறப்படும்!

## சபையில் அறிவித்தார் நீதி அமைச்சர்



கொழும்பு, ஜூன். 26

செம்மணி மனித புதைகுழி விவகாரத்தின் உண்மை எப்போது வெளிவரும் என்று மக்கள் எதிர்பார்த்துள்ளார்கள் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

07

# இலங்கையில் உணவுத் தட்டுப்பாட்டால் பல மில்லியன் மக்கள் பாதிக்கப்படுவர்!

## உலக உணவுத் திட்டம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 26

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் நேரடித் தாக்கங்கள் காரணமாக, இலங்கையில் மேலும் பல மில்லியன் மக்கள் தங்களின் அடிப்படை உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும் என உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.

உலக உணவுத் திட்டம் வெளியிட்டுள்ள புதிய பகுப்பாய்வு அறிக்கையின் படி, இந்த நெருக்கடியின் விளைவாக சில சந்தர்ப்பங்களில் மக்கள் கடுமையான பட்டினி நிலைக்குத் தள்ளப்படும் அபாயமும் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

07

# சர்வதேச சந்தையில் விலை குறைந்தால் எரிபொருளின் விலை இங்கும் குறையும்!

கொழும்பு, ஜூன். 26

சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை குறையும் சந்தர்ப்பங்களில், அந்த விலைக்குறைப்பின் பலனை நிச்சயமாக நுகர்வோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என வலுசக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் எரிபொருள் விலை நிவாரணத்தை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

07

# வேலையற்ற பட்டதாரிகள் நேற்று யாழ். செயலகம் முன் போராட்டம்!



யாழ்ப்பாணம், ஜூன். 26

வேலையற்ற பட்டதாரிகள் நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் முன்பாக போராட்டத்தை முன்னெடுத்தனர்.

07

# அரசியல் பலத்தைக் காட்டுவதற்கு மாகாண தேர்தல் கோரும் எதிரணி

## மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன். 26

மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டதன் உண்மையான நோக்கமான அதிகாரப் பகிர்வுக்காக அன்றி, தங்களின் அரசியல் பலத்தைக் காட்டவே எதிர்க்கட்சிகள் மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோரி வருகின்றன என இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடும்

07

# போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு சிங்கப்பூர் பாணியில் கடும் தண்டனை!

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, ஜூன். 26

இலங்கையில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சிங்கப்பூர் பாணியிலான கடுமையான தண்டனை முறைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதியின் உரைக்குப் பதிலளித்துப் பேசும் போதே அவர் இந்த கோரிக்கையை முன்வைத்தார்.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் எந்தவித பாகுபாடுமின்றித் தண்டிக்கப்பட வேண்டும் என

07

# மூத்த ஊடகர் திருச்செல்வம் காலமானார்!



யாழ்ப்பாணம், ஜூன். 26

வடமராட்சியின் மூத்த பத்திரிகையாளரில் ஒருவரான ஏ. என். எஸ். திருச்செல்வம் கடந்த ஐந்து ஆண்டுகளாக சுகவீனமுற்ற நிலையில் நேற்று வியாழக்கிழமை மாலை 6.00 மணியளவில் தனது 74 ஆவது வயதில் புலோலி, புற்றளையில் உள்ள இல்லத்தில் காலமானார்.

இவர் கடந்த 1975 ஆண்டு காலப்பகுதியில் லேக்கவுஸ் நிறுவனத்தின்

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண அதிகாரத்தை குறைக்கும் சூழல் சட்டமூலத்தை எதிர்ப்போம்!

## ரவூப் ஹக்கீம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன். 26

தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் சில விடயங்கள் மாகாண சபை அதிகாரங்களுடன் முரண்படுகின்றன. மாகாண சபை அதிகாரங்களை குறைக்கும் இந்த சட்டமூலத்தை அனுமதிக்க முடியாது. அதற்கு எதிராகவே நாங்கள் வாக்களிப்போம் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசியலமைப்பின் 13ஆம் திருத்தத்திற்கு பின்னர் அமைப்பு ரீதியான மாற்றம் ஒன்று ஏற்பட்டது. அதாவது மாகாண சபைக்கான விடயங்கள் தொடர்பான ஒரு பட்டியலும் மத்திய அரசுக்கு ஒரு பட்டியலும் ஒதுக்கப்பட்டது. அதேபோன்று நிழல் பட்டியல் ஒன்றும் ஒதுக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது கொண்டுவரப்பட்டிருக்கும் தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் சில விடயங்கள் மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட விடயங்களுடனும் நிழல் பட்டியலில் ஒதுக்கப்பட்டுள்ள விடயங்களுடன் முரண்படுகின்றன என்ற விடயம் தெளிவாக தெரிகிறது.

ஆனால் இந்த சட்டமூலத்துக்கு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஆளும் தரப்பினர்கள் தெரிவிக்கின்றனர். பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு சட்டமா அதிபர்கள் வந்து தெரிவிப்பதன் மூலம், அது அரசியலமைப்புக்கு உட்பட்டதாக கருதமுடியாது. இவ்வாறானதொரு சம்பவம் நிதிக் குழுவின் அண்மையில் இடம்பெற்றது.

அதாவது வெளிநாட்டு கடன் செலுத்தும் நடவடிக்கையில், தவறான வங்கி கணக்கொன்றுக்கு பணம் செலுத்தப்பட்டமை தொடர்பான விசாரணையின் போது, மத்திய வங்கி அதற்கு பொறுப்பில்லை என ஆளுநர் தெரிவித்தார். பணப் பரிமாற்றம் சட்டத்தின் ஒழுங்குவிதிகளில் இருந்து நாங்கள் விடுவிக்கப்பட்டவர்கள்.

அதனால் அதற்கு நாங்கள் பொறுப்பில்லை என தெரிவித்தார். சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளும் அதனை



ஏற்றுக்கொண்டனர். ஆனால் அவ்வாறு இல்லை என நான் சுட்டிக்காட்டி தெளிவுபடுத்தினேன். சட்டமா அதிபர் திணைக்களம் அமைதி காக்கிறது. ஆனால் சட்டமா அதிபர் எப்போதும் உண்மையே கூறுகிறார். துரதிர்ஷ்டவசமாக இந்த சட்டமூலம் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த ப்படவில்லை. சிரேஷ்ட சட்டத்தரணிகள்கூட இது தொடர்பில் எதனையும் தெரிவிக்கவில்லை.

தற்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த சட்டமூலம் மாகாண சபைகளின் அதிகாரங்களுடன் முரண்படுகிறது. இந்த சட்டத்தை கொண்டுவருவதற்கு முன்னர், மாகாண சபைகளின் நிலைப்பாட்டை கேட்கவேண்டும். ஆனால் மாகாண சபை தற்போது இயங்காமல் இருப்பதால், ஆளுநர்களிடமாவது இது தொடர்பில் வினவி இருக்க வேண்டும். அவ்வாறு எதனையும் செய்யாமல் கொண்டுவந்திருக்கும் இந்த சட்டமூலத்துக்கு நாங்கள் எதிராகவே வாக்களிப்போம்-என்றார். (அ)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 9 இல்!

கொழும்பு, ஜூன். 26

2026 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் 9 ஆம் திகதி நடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே அறிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பரீட்சையைத் திட்டமிட்டபடி நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், இந்த பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கடந்த மார்ச் 30 ஆம் திகதி முதல் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# வடக்கு மாகாண ஆளுநர் அதிகார துஷ்பிரயோகம்!

## நாமல் ராஜபக்ஷ கண்டனம்

கொழும்பு, ஜூன். 26

வவுனியா மாநகரசபை மேயர் காண்டீபன் மற்றும் சாவகச்சேரி நகர சபை உப தவிசாளர் ஜி. கிஷோர் ஆகியோரை பதவியில் இருந்து நீக்கியிருப்பது வெளிப்படையான அதிகார துஷ்பிரயோகம் என்றும், அது ஜனநாயகத்தின் மீது நடத்தப்பட்ட கடுமையான தாக்குதல் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையை விமர்சித்ததற்காக மட்டுமே, தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரை உப தவிசாளர் பதவியிலிருந்து மட்டுமன்றி நகர சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்குவது ஏற்றுக்கொள்ள முடியாதது என அவர் தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்ந்து நடத்தப்படாமல் இருக்கும் சூழலில், எதிர்ப்புக் குரல்களை அடக்கவும் விமர்சகர்களை தண்டிக்கவும் தேசிய மக்கள் சக்தி அரசு ஆளுநரின் அதிகாரங்களையும் அரச அதிகாரத்தையும் பயன்படுத்தி வருவதாகவும் நாமல் ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார். (அ)

# சாதாரண தரப் பரீட்சைச் சான்றிதழ்கள் இணையவழியில் மட்டும் வழங்கப்படும்!

கொழும்பு, ஜூன். 26

2025 (2026) ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான சான்றிதழ்கள் இணையவழி முறைமையின் ஊடாக மட்டுமே வழங்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பரீட்சார்த்திகள் எந்தக் காரணம் கொண்டும் பரீட்சைகள் திணைக்களத்துக்கு நேரடியாக வருகை தர வேண்டிய அவசியமில்லை.

பரீட்சார்த்திகள் தமது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்காக திணைக்களத்திற்கு வருவதைத் தவிர்த்து, https://certificate.doenets.lk/certificate எனும் இணையத்தள முகவரி ஊடாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

இந்த இணையவழி முறைமையின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு, அவர்களின் சான்றிதழ்கள் அஞ்சல் சேவை மூலம் வீடுகளுக்கே அனுப்பி வைக்கப் படும்-என்றார். (அ)

# சம்பளம், ஓய்வூதிய ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு நியமன கடிதங்கள்

கொழும்பு, ஜூன். 26

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் வேதனம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வேதனம் மற்றும் ஓய்வூதிய ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாரநாயக்க தலைமையில் நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற அமைச்சின் செயலாளர் ரி. அசோக பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், ஓய்வுபெற்ற நீதியரசர் கே. கே. ஏ. வி. சுவர்ணாதிபதி, என். பி. எம். ரணதுங்க, மருத்துவர் ஆர். டபிள்யூ. ஜயந்த, ஜி. எம். முதித் சுஜீவ, பிரிகேடியர் (ஓய்வுபெற்ற) பி. ஜே. பெர்னாண்டோ, ஏ. எல். முஹம்மட் முக்தார், எஸ். டி. பி. ரத்நாயக்க, ஏ. டபிள்யூ. லால் சந்திர வீரகோன், ஜி. ஏ. பி. பத்மநாப, கே. எஸ். லால் பெரேரா மற்றும் ஆணைக்குழுவின் செயலாளர் டி. எம். சி. நாலக திசாநாயக்க ஆகியோர் நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டனர்.

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களின் வேதனம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான பிரச்னைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்காக, 2026.06.22 ஆம் திகதியிடப்பட்ட 2494/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் இந்த வேதனம் மற்றும் ஓய்வூதிய ஆணைக்குழு அண்மையில் நியமிக்கப்பட்டது. (அ)

## இந்தியாவிலிருந்து கடத்தப்பட்ட

# 3.9 கோடி ரூபா பெறுமதியான மருந்துகளுடன் நால்வர் கைது!

கொழும்பு, ஜூன். 26

இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட சுமார் 3 கோடியே 90 இலட்சம் ரூபாய் பெறுமதியான தோல் நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் கிரீம் வகை மற்றும் மருந்துப் பொருள்களுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், பிட்டிப்பனை லெல்லம பகுதிக்கு அருகில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இந்த சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

மூன்று டிங்கி படகுகள் மூலம் இந்தியாவிலிருந்து கடல் வழியாகக் கொண்டு வரப்பட்ட இந்த மருந்துப் பொருள்கள், பின்னர் குளிரூட்டப்பட்ட லொறி ஒன்றில் ஏற்றிச் செல்லப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நால்வரும் பிட்டிப்பனை பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுத்து வருவதுடன், விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளனர். (அ)

# கடந்த ஆண்டைவிட 7.56 வீத வளர்ச்சி ஏற்றுமதித்துறையில் புதிய மைல்கல்

கொழும்பு, ஜூன். 26

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானம் 7.3 பில்லியன் அமெரிக்க டொலரைத் தாண்டியுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 7.56 வீத வளர்ச்சியாகும் என சபை குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, மே மாதத்தில் பொருட்கள் ஏற்றுமதி 18.25 வீதத்தாலும், சேவை ஏற்றுமதி 18.67 வீதத்தாலும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதித்துறையில் பதிவாகியுள்ள இந்த வளர்ச்சி, நாட்டின் வெளிநாட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கான சாதகமான முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
26.06.2026 வெள்ளிக்கிழமை
பராபவ வருடம், ஆனி 12

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# ராஜபக்ஷ கட்சிக்கு இருக்கக்கூடிய விவேகமான தெரிவு

ராஜபக்ஷாக்கள் உட்பட சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர்களுக்கு தங்களது அரசியல் கட்சிக்கு நாட்டு மக்கள் மத்தியில் தற்போது இருக்கும் செல்வாக்கு நிலை குறித்து சரியான புரிதல் இருப்பதாக தெரியவில்லை.

மக்கள் தங்களுடன் மீண்டும் அணிதிரளத் தொடங்கிவிட்டார்கள் என்று அண்மையில் கூறிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வருடம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான திட்டம் தங்களிடம் இருப்பதாகவும் குறிப்பிட்டார். இது போக 2029 ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வெற்றி பெறுவார் என்று கட்சியின் முக்கியஸ்தர்கள் அடிக்கடி கூறுகிறார்கள்.

உரிய காலத்தில் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்பட்டால் தங்களது கட்சி குறைந்தது ஐந்து மாகாண சபைகளிலாவது ஆட்சியை அமைக்கும் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரான சட்டத்தரணி சாகர காரியவாசம் நேற்றைய தினம் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கிறார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மகாணசபை தேர்தல்களைச் சந்திக்க கடுமையாக அஞ்சுகிறது.தேர்தல் தற்போது நடத்தப்பட்டால்,தங்களது வாக்கு வங்கி வீழ்ச்சிகண்டு பழையபடி மூன்று சதவீதத்துக்கு வந்துவிடுமோ என்று அரசாங்கத்திற்குள் பயம் நிலவுகிறது. அநனால்தான் மாகாணசபை தேர்தல்களை நடத்தாமல் அரசாங்கம் பல்வேறு காரணங்களைக் கூறி காலத்தைக் கடத்துகிறது. ஒட்டுமொத்தமாக பார்க்கும்போது பொதுஜன பெரமுன தலைமையிலான பலம்பொருந்திய கூட்டணியே வரவிருக்கும் மாகாணசபை தேர்தல்களில் பெரும்பான்மையான இடங்களில் அமோக வெற்றி பெறும் என்றும் காரியவாசம் கூறியிருக்கிறார்.

காரியவாசத்தின் ஆடம்பரமான பேச்சுக்களைத் தாண்டி தற்போதைய அரசியல் பரப்பின் கள யதார்த்தங்களை உற்றுநோக்கும்போது அது முற்றிலும் மாறுபட்ட கதையைக் கூறுகிறது. தென்னிலங்கையில் ஐந்து மாகாண சபைகளில் பொதுஜன பெரமுனவினால் ஆட்சியை அமைக்க முடியும் என்ற அவரின் நம்பிக்கை பழைய நினைவுகளை அடிப்படையாகக் கொண்டது என்பதில் சந்தேகமில்லை. கட்சியின் பாரம்பரிய சிங்கள பௌத்த தேசியவாத மையப் பகுதியை இனிமேலும் மீட்டெடுக்க முடியும் என்ற நம்பிக்கையை எஞ்சியிருக்கும் கட்சி உறுப்பினர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் ஏற்படுத்த அவர் முயற்சிக்கிறார் என்று தெரிகிறது.


ராஜபக்ஷாக்களும் அவர்களது விசுவாசிகளும் “அறகலயவுக்கு பின்னரான வாக்காளர்களின் மனநிலையையும் மாறிவிட்ட அரசியல் நிலக்காட்சியையும் புரிந்துகொள்ளத் தவறுகிறார்கள். பொருளாதார நெருக்கடி தென்னிலங்கை மக்களின் குறிப்பாக, கிராமப்புற வாக்காளர்களின் மனநிலையை பெரும்பாலும் நிரந்தரமாக மாற்றியமைத்திருக்கிறது.

ராஜபக்ஷ குடும்பத்தின் மீதான விசுவாசம் அல்லது போருக்கு பின்னரான வெற்றிக் குதூகலத்தை அடிப்படையாகக் கொண்ட உணர்ச்சிவசமான முழக்கங்கள் தற்போதைய வாழ்க்கைச் செலவு, ஆட்சிமாற்றம் மற்றும் கடந்தகால ஊழல் முறைகேடுகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் போன்ற உடனடி விடயங்களினால் மறைக்கப்பட்டு விட்டன.

ஆனால், ராஜபக்ஷாக்கள் போர் வெற்றி உட்பட சிங்கள பௌத்த தேசியவாத கோஷங்களைப் பயன்படுத்தி மீண்டும் பெரும்பான்மையினவாத அணிதிரட்டலைச் செய்து மீண்டும் அதிகாரத்துக்கு வரமுடியும் என்று இன்னமும் நம்புகிறார்கள்.

மாகாணசபைகளை கைப்பற்றுவதை விடவும் ஒரு பலமான மூன்றாவது அல்லது நான்காவது அரசியல் சக்தியாகத் தப்பிப்பிழைப்பதற்கு வழியைப் பார்ப்பதே பொதுஜன பெரமுனவுக்கு நடைமுறைச் சாத்தியமானதும் விவேகமானதுமான தெரிவாக இருக்க முடியும்.

# இஸ்லாமிய வெறுப்புணர்வு;
## மேற்குலகில் குற்றங்களைத் தூண்டும் அரசியல்




கடந்த வார இறுதியில் எடின்பர்க்கில் மசூதியிலிருந்து வெளியேறிய இருவர் உட்பட ஐந்து பேர் மீது நடத்தப்பட்ட அதிர்ச்சியூட்டும் தாக்குதல்கள், இன்று பிரிட்டனில் உள்ள பல முஸ்லிம்கள் உணரும் அச்சத்தை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன. எல்லையைக் கடந்த தெற்குப் பகுதிகளில் (இங்கிலாந்தில்) இந்தச் சம்பவத்திற்கு மிகக் குறைந்த அளவே கவனம் கிடைத்தது.

தற்போது ஒரு நபர் மீது ஐந்து கொலை முயற்சி வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, மேலும் அவை “பயங்கரவாதத் தொடர்பு கொண்ட காரணத்தால் தீவிரமடைந்தவை” என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களின் உண்மைகள் இனி வரும் காலங்களில் நீதிமன்றத்தில் முறையாக விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

சந்தேகத்திற்கு இடமின்றித் தெரிவது என்னவென்றால், பிரிட்டன், ஐரோப்பா மற்றும் பிற இடங்களில் உள்ள முஸ்லிம் சமூகங்கள் எதிர்கொள்ளும் உண்மையான - வளர்ந்து வரும் அச்சம் தான். அமெரிக்க ஜனாதிபதி ஒருமுறை, “இஸ்லாம் நம்மை வெறுக்கிறது என்று நான் நினைக்கிறேன்” என்று கூறியிருந்தார்.

அரசியல் தலைவர்களின் பெருகிவரும் வெளிப்படையான இஸ்லாமிய வெறுப்புச் சொல்லாடல்களும் அதற்கு மற்றவர்களின் மௌனமான எதிர்வினையும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளும் பலரைத் தங்களைப் பாதுகாப்பற்றவர்களாகவும் விரக்தியடைந்தவர்களாகவும் உணரச் செய்துள்ளன.

இஸ்லாமிய வெறுப்பை (Islamophobia) கண்காணிப்பதற்கான அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பங்காளியான “பிரிட்டிஷ் முஸ்லிம் டிரஸ்ட்” (British Muslim Trust) நடத்திய ஆய்வின்படி, பாதிக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் (56 சதவீதம் ) கடந்த ஆண்டில் தங்களது மதத்தின் அடிப்படையில் பாரபட்சத்தை எதிர்கொண்டதாகக் கூறியுள்ளனர். “டெல் மாமா” (Tell Mama) திட்டம் 2024 ஆம் ஆண்டில் 6,313 முஸ்லிம் எதிர்ப்பு வெறுப்புச் சம்பவங்களைக் கணக்கிட்டுள்ளது.

கடந்த ஆண்டு இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் மத வெறுப்புக் குற்றங்கள் சாதனை அளவை எட்டின் இதில் 45 சதவீதமானவை முஸ்லிம்களுக்கு எதிராகவே நடத்தப்பட்டன. மசூதிகள் அடிக்கடி இலக்கு வைக்கப்படுவதால் பிரிட்டன் முஸ்லிம் கவுன்சில் மசூதிகளை “லாக்டவுன்” (முடக்கம்) பயிற்சிகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்காவில், கடந்த மாதம் சான் டியாகோவில் உள்ள ஒரு மசூதியில் இரண்டு வெள்ளை இன மேலாதிக்க துப்பாக்கிதாரிகள் மூன்று பேரைக் கொன்றனர்.

தாக்கப்படுபவர்கள் அவர்களின் இனம் அல்லது மதத்தின் காரணமாகவே குறிவைக்கப்படுகிறார்களா என்பது தெளிவாகத் தெரிவதில்லை. ஒருவேளை, தாக்குதல் நடத்துபவர்களுக்கே அது தெரியாமல் இருக்கலாம். சிலர் முஸ்லிம்கள் என்று தவறாகக் கருதப்பட்டு குறிவைக்கப்படுகிறார்கள்.

ஒரு பெண்ணின் ஹிஜாப் (தலைக்கவசம்) வலுக்கட்டாயமாக இழுக்கப்பட்டால் அது முஸ்லிம் எதிர்ப்பு குற்றமாகப் பதிவு செய்யப்படலாம், ஆனால் அதே பெண் மீது யாராவது எச்சில் துப்பி “என் நாட்டை விட்டு வெளியேறு” என்று கூறினால் அது அவ்வாறு பதிவு செய்யப்படாமல் போகலாம். சர்வதேச மன்னிப்புச்சபையின் (Amnesty International) வடக்கு அயர்லாந்து இயக்குனர், “இந்த மாதம் பெல்ஃபாஸ்டில் நடந்த குடியேற்றவாசிகளுக்கு எதிரான கலவரங்களில், அங்கு இதற்கு முன்பு நடந்த இனவாத வன்முறைகளை விட “முஸ்லிம் எதிர்ப்பு உணர்வு” மிக முக்கிய அம்சமாகத் தோன்றியதாகக்” குறிப்பிட்டுள்ளார்.

2023 ஒக்டோபர் 7 ஹமாஸ் தாக்குதல்கள் மற்றும் காசா போரைத் தொடர்ந்து, யூத எதிர்ப்பு சம்பவங்களைப் போலவே இஸ்லாமிய வெறுப்புச் சம்பவங்களும் கடுமையாக உயர்ந்துள்ளன. ஆனால் இதன் வேர்கள் ஆழமானவை. கடந்த ஆண்டு, “ஐரோப்பிய இஸ்லாமோஃபோபியா அறிக்கை”யின் (European Islamophobia Report) சுயாதீன கல்வித்துறை ஆசிரியர்கள், “முஸ்லிம் எதிர்ப்பு இனவாதம் கவலையளிக்கும் வகையில் இயல்பான ஒன்றாக மாறிவருவது” குறித்து எச்சரித்தனர்.

ஐரோப்பாவில் உள்ள வாக்காளர்களில் கால் பகுதியினர் இப்போது தீவிர வலதுசாரி கட்சிகளை ஆதரிக்கின்றனர். ஆனால், அந்த அறிக்கையின் ஆசிரியர்கள் வாதிடுவது போன்று , இத்தகைய இயக்கங்கள் மத்திய போக்கு (centrist) அரசியல்வாதிகளையும் “முஸ்லிம் சமூகங்களை இலக்காகக் கொண்ட ஒதுக்கும் மற்றும் பாதுகாப்பு சார்ந்த சொல்லாடல்களை ஏற்றுக்கொள்ள” தூண்டுகின்றன.

2024 ஆம் ஆண்டின் “ரன்னிமீடு டிரஸ்ட்” (Runnymede Trust) அறிக்கையும், முஸ்லிம்கள் சமூகத்திற்கு ஒரு அச்சுறுத்தலாகவே பெருகிய முறையில் சித்தரிக்கப்படுகிறார்கள் என்று வாதிட்டது. இதன் விளைவாக, அவர்கள் “யார் வேண்டுமானாலும் தாக்கக்கூடிய எளிய இலக்காகப் பார்க்கப்படுகிறார்கள்” என்று பாராளுமன்ற உறுப்பினர் சாயீதா வார்சி கூறினார்.

வெறுப்புக் குற்றங்களுக்கு எதிரான ஒரு புதிய உத்தி பயனுள்ளதாக இருக்கும். இந்த விவகாரத்தைச் சமூகங்களை வலுப்படுத்துவதற்கான பரந்த செயல் திட்டத்துடன் இணைத்தது அதன் தீவிரத்தன்மையைக் குறைத்து விட்டதாக விமர்சகர்கள் கூறுகின்றனர். பள்ளிகள் மற்றும் மசூதிகள் போன்ற இடங்களுக்கு உதவும் நிதியுதவியைக் கையாள்வதில் அரசாங்கம் தனது அணுகுமுறையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்:

நிதியுதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் தாங்கள் ஏற்கனவே வெறுப்புக் குற்றத்தை எதிர்கொண்டதை நிரூபிக்க வேண்டும் என்ற தற்போதைய நிபந்தனை, பாதிப்புக்குள்ளாகக் கூடிய பல இடங்களைப் பாதுகாப்பற்றதாக மாற்றுகிறது. சமூக ஊடகங்களின் சிறந்த ஒழுங்குமுறை மிகவும் முக்கியமானது, ஏனெனில் பெரும்பாலும் இலாபத்திற்காக அல்லது பிரிவினையைப் பரப்ப விரும்பும் வெளிநாட்டு சக்திகளால் ஊக்குவிக்கப்படும் தவறான தகவல்கள் (disinformation) எரியும் நெருப்பில் நெய்யை ஊற்றுகின்றன.

ஆனால் இதைவிட மிகவும் அடிப்படையான மாற்றம் தேவைப்படுகிறது. வெறுப்புக் குற்றங்களைக் கண்டனம் செய்வது என்பது செய்ய வேண்டிய மிகக் குறைந்தபட்ச காரியம் மட்டுமே. அரசியல்வாதிகளும், பொதுமக்களும் கூட, அதற்குத் தீனி போடும் முஸ்லிம் எதிர்ப்பு உணர்வின் பரந்த எழுச்சியை எதிர்கொண்டு சவால் விடுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

(த கார்டியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். திறமைகள் வெளிப்படும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் பொறுப்புகள் தேடி வரும். தொட்டது துலங்கும் நாள்.

**மிதுனம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**
புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலை தீர்ப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். புது வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கன்னி**
கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை இருக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில சமயங்களில் விரக்தியாக பேசுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

# பகிரப்பட்ட மாகாண-உள்ளூராட்சி அதிகாரம் சுற்றாடல் சட்டம் வாயிலாக பறிக்கப்படுகிறது

## வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஷ்

யாழ்ப்பாணம், ஜுன். 26

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் ஒவ்வொன்றாக மத்திய அரசாங்கத்தின் அதிகார சபைகள் ஊடாக பறிக்கப்படுகின்றன. மத்திய அதிகார சபைகளுக்கு அதிக சட்ட அதிகாரங்களைக் கையளிப்பதன் வாயிலாக மாகாண நிரலுக்கள் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் பறிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய சுற்றுச் சூழல் சட்ட மூலம் தொடர்பில் மத்திய அதிகார சபையினால் உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் நல்லூர் பிரதேச சபையில் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. இதில் உள்ளூராட்சி மன்றங்கள் சார்பாக தமது அபிப்பிராயத்தினை வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது அரசாங்கத்தினால் சுற்றுச் சூழல் சட்ட மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இச் சட்ட மூலத்தின் வாயிலாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள குறைந்த பட்ச அதிகாரங்களும் மீள மத்திக்கு எடுக்கப்படுகின்றது. அரசியலமைப்புச் சட்டத்தின் 9 ஆவது அட்டவணையில் நிரலில் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி விடயங்கள் ஜனநாயகத்திற்கும் சட்டத்திற்கும் புறம்பாக பறிக்கப்படுகின்றன.

கொண்டு வரப்படும் சட்டத்தின் பிரகாரம், சுற்றாடல் விடயத்தில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை உள்ளூராட்சி மன்றங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முடியும் எனக் கூறப்படுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களில் திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான அளணியை நிரப்புவதற்கு அரசாங்கம் அனுமதிக்கவில்லை. கழிவகற்றும் வாகனங்களுக்கான அனுமதிகள் கிடப்பில் உள்ளன.

சில நியமத்துணைவிதிகளை நாம் உருவாக்கவதற்கு மாகாண சபையின்றி தடைகள் உள்ளன. இவ்வாறான நிலையில் முந்திக் கொண்டு அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை பறிப்பது மட்டுமல்ல உள்ளூராட்சி மன்றங்களை செயலிழக்கச் செய்யம் வகையில் நீதிமன்றங்களில் நிறுத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றமை கண்டிக்கத்தக்கது-என்றார்.(அ)

# மாகாண மட்ட சதுரங்க போட்டி: வவுனியா தமிழ் ம.வி. சாதனை

கிளிநொச்சி, ஜுன். 26

இலங்கை பாடசாலைகள் சதுரங்க சங்கத்தின் ஏற்பாட்டில், வடக்கு மாகாணமட்ட பாடசாலைகளுக்கிடையிலான தனிநபர் சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டி கடந்த ஜுன் 19, 20 மற்றும் 21 ஆகிய திகதிகளில் பளை இந்துக்கல்லூரியில் நடைபெற்றது.

இப்போட்டியில் வட மாகாணத்தின் பல்வேறு பாகங்களிலிருந்தும் மொத்தம் 1000 இற்கும் மேற்பட்ட இளம் வீரர்கள் கலந்துகொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர்.



இதில் 06 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான பிரிவுப் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் பிரதீபன் அத்விக் முதலிடத்தைப் பெற்று மாகாணமட்ட சாம்பியனாக தெரிவாகி சாதனை படைத்துள்ளார்.

இப்பிரிவில் வவுனியா இறம்பைகுளம் மகளிர் பாடசாலையை சேர்ந்த ஆர்.அட்சரன் இரண்டாம் இடத்தையும், துன்னாலை இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ரி.தஸ்வின் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்று வவுனியா மாவட்டத்திற்கும் தனது பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ள இளம் வீரன் பிரதீபன் அத்விக்கிற்கு பலரும் பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர். (அ)

# யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தில் விவசாய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு!

யாழ்ப்பாணம், ஜுன். 26

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தின் 12 ஆவது உலர் வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு நேற்று முன் தினம் கிளிநொச்சியில் உள்ள விவசாய பீடத்தில், விவசாய பீட பீடாதிபதி கந்தையா பகீரதன் தலைமையில் இடம்பெற்றது.

"வர்த்தக விவசாயத்திற்கான புத்திசாலித்தனமான தீர்வுகள்" என்ற தொனிப்பொருளில், மாநாடு நடத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடமானது, பிரதேசத்தை மையப்படுத்தி, உலர் வலய விவசாயம் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி மாநாடு ஒன்றை, 2015 ஆம் ஆண்டு முதல் வருடம் தோறும் நடத்தி வருகின்றது.

இம்முறை 12ஆவது உலர் வலய விவசாயத்திற்கான சர்வதேச ஆராய்ச்சி மாநாடு, வர்த்தக விவசாயத்திற்கான புத்திசாலித்தனமான தீர்வுகள் என்ற தொனிப்பொருளில் இடம்பெற்றது.

மாநாட்டின் முழுமையான அமர்வுப் பேச்சாளராக, கனடா மனிட்டோபா பல்கலைக்கழகத்தின் மண் நுண்ணுயிரியல் பேராசிரியர் இவன் ஒரேஷ்நிக் பங்கேற்று உரையாற்றினார்.

அத்துடன், ஜப்பான் ரோக்கியோ பல்கலைக்கழகத்தின் வனவியல் பேராசிரியர் ரொசி ஆகி ஒவாரி பங்கேற்று உரையாற்றினார்.

மாநாட்டில், இலங்கை மற்றும் சர்வதேச ஆய்வாளர்களால், பயிராக்கவியல், விலங்கு விஞ்ஞானம் மற்றும் நீர் உயிரின வளர்ப்பு, பயிர் பாதுகாப்பு மற்றும் உயிர் தொழில்நுட்பவியல், மண், சூழல் மற்றும் நீர் விஞ்ஞானம், உணவு விஞ்ஞானம் மற்றும் போசனையும், பொருளாதாரம் மற்றும் அறிவூட்டல் ஆகிய உப தொனிப்பொருள்களில், 60 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் முன்னிலைப்படுத்தப்பட்டு, மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மாநாட்டில், பல்வேறு பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் மற்றும் விவசாயத்துறைசார் நிபுணர்கள் பங்கேற்றனர்.

# மன்னாரில் மக்கள் மணல் பெறுவதில் பெரும் சவால்!

மன்னார், ஜுன். 26

மன்னாரில் மணல் கிடைப்பதில் பாரிய சவால்களுக்கு மக்கள் முகம் கொடுக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதாகவும், கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு மணல் விற்பனை செய்யப்படுவதால் மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் மன்னார் நகர சபையின் தலைவர் டானியல் வசந்தன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

கட்டுப்பாட்டு விலையில் மணல் வழங்குவோருக்கு மட்டுமே அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தேர்தலில் "அழியாத மை" நீக்கம் ரூபா 100 மில்லியன் நிதி சேமிப்பு

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன். 26

தேர்தல் வாக்களிப்புக்குப் பின்னர் வாக்காளர்களின் விரல்களில் இடப்படும் "அழியாத மை" நடைமுறையை நீக்குவதன் மூலம், ஒரு தேர்தலுக்கு சுமார் 100 மில்லியன் ரூபாய் அரச நிதியைச் சேமிக்க முடியும் என சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் (பவ்ரல்) நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பப்ரல் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த முன்மொழிவு பல கோணங்களில் நேர்மறையான ஒரு நடவடிக்கையாகும்.

அரசியல் கட்சிகள், பங்குதாரர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளிடையே இது பல ஆண்டுகளாக விவாதிக்கப்பட்டு வருகிறது.

இந்த நடைமுறையை ஒழிப்பதன் மூலம், அழியாத மை இறக்குமதி, விநியோகம் மற்றும் அதன் நிர்வாகக் கையாளுதல் தொடர்பான செலவுகள் குறையும்.

இது தேர்தல் செலவுகளை ஒட்டுமொத்தமாகக் குறைப்பதற்கு பங்களிக்கும்.

வாக்காளர் அடையாள அட்டைகளின் கட்டாயத் தேவை வாக்காளர் சரிபார்ப்பு செயல்முறைகளை வலுப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் தேர்தல்களின் போது ஆள்மாறாட்டம் செய்வதற்கான வாய்ப்புகள் பெருமளவு குறைந்துள்ளன.

தற்போதைய சூழலில், முன்னைய காலங்களை விட அழியாத மையின் தேவை குறைந்துள்ளது.

பல தசாப்தங்களாக இலங்கையின் தேர்தல் செயல்முறையின் ஒரு அங்கமாக அழியாத மை பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும், நவீனமயமாக்கப்பட்ட வாக்காளர் இடாப்புகள் மற்றும் தொழில்நுட்ப பயன்பாடு காரணமாக, மோசடியான வாக்குகளைச் செலுத்துவதற்கான வாய்ப்புகள் பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளன-என்றார்.

அரச வாகன துஷ்பிரயோகம்;

# பௌசிக்கு எதிரான வழக்கு; நீதிமன்ற தீர்ப்பு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூன். 26

முன்னாள் பிரதி அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி அரச வாகனம் ஒன்றை முறையற்ற வகையில் பயன்படுத்தியதன் மூலம் குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளார் எனத் தீர்ப்பளிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவின் விசாரணையை உயர் நீதிமன்றம் நிறைவு செய்துள்ளதுடன், அதன் தீர்ப்பை மறுதிகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்துள்ளது.

இலங்கை வர்த்தக சபையின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்னவினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த அடிப்படை உரிமைகள் மனு, பிரதம நீதியரசர் ப்ரீதி பத்மன் சூரசேன, உயர்நீதிமன்ற நீதியரசர்களான ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவர் அடங்கிய நீதியரசர்கள் ஆயத்தின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதியரசர்கள், வழக்கின் தீர்ப்பை எதிர்காலத் திகதியொன்றில் அறிவிப்பதாகக் கூறினர். (அ)

# வற் வரி வரம்பில் மாற்றமில்லை

கொழும்பு, ஜூன். 26

ஆண்டு வருவாய் வரம்பை 60 மில்லியன் ரூபாயிலிருந்து 36 மில்லியன் ரூபாயாகக் குறைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி சேர் வரி மற்றும் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி தொடர்பான வரவு செலவுத் திட்ட முன்மொழிவு நடைமுறைப்படுத் தப்படமாட்டாது என பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஜூலை முதலாம் திகதி முதல் இந்த வரி மாற்றங்கள் நடைமுறைக்கு வரும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தினார். (அ)

# வங்கி உதவி பெற முடியாத குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் புதிய சலுகைக் கடன் திட்டம்

கொழும்பு, ஜூன். 26

குறைந்த வருமானம் பெறும் மற்றும் முறையான வங்கிச் சேவைகளைப் பெற முடியாத குடும்பங்களின் வீட்டுப் பிரச்னையைத் தீர்க்கும் நோக்கில், புதிய சலுகைக் கடன் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது தற்காலிக மற்றும் பாதுகாப்பற்ற வீடுகளில் வாழும் குறைந்த வருமானம் உடைய குடும்பங்களுக்கு, புதிய வீடு ஒன்றை அமைத்துக் கொள்வதற்காக தலா ஒரு மில்லியன் ரூபாய் வழங்கும் திட்டத்தை அரசாங்கம் இலக்காகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 10,000 வீடுகளை அமைப்பதே முக்கிய நோக்கமாகும். நாடு தழுவிய ரீதியில் வீடுகளைக் கட்டத் தொடங்கி, நிதிப் பற்றாக்குறை காரணமாக அவற்றை முழுமையாக நிறைவு செய்ய முடியாமல் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. கடந்த 2024 டிசெம்பரில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புகளின் மூலமும் இத்தகைய குடும்பங்கள் பெருமளவில் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

வழக்கமான வங்கி நடைமுறைகளின் கீழ், இத்தகைய எளிய குடும்பங்களுக்கு சொத்து ஆவணங்கள், நிலையான வருமான சான்றிதழ்கள் அல்லது வருமானத்தை உறுதிப்படுத்தும் சான்றுகள் இல்லாத காரணத்தால், அவர்களால் வங்கிகளில் வீட்டு வசதிக் கடன்களைப் பெற முடிவதில்லை.

இந்த நிலையை கருத்தில் கொண்டு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக வழங்கப்படும் கடன் திட்டங்களில் சில சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் ஆலோசித்துள்ளது-என்றார்.

# 6 மாதங்களாக 10 மக்கள் மனுக்களில் கையெழுத்திடாமல் உள்ள சபாநாயகர்!

## பாராளுமன்றத்தில் தயாசிறி விசனம்

கொழும்பு, ஜூன். 26

பொதுமக்களின் பிரச்னைகள் அடங்கிய 10 முக்கிய மனுக்கள் கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக சபாநாயகரின் அலுவலகத்தில் கையெழுத்திடப்படாமல் தேங்கிக் கிடப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றம் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று முன் தினம் கூடியது. இதன் போதே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்கள் மனுக்கள் பாராளுமன்ற செயலகக் குழுவினால் சரிபார்க்கப்பட்டு, சபாநாயகரின் ஒப்புதலுக்காகவும் கையெழுத்துக்காகவும் அனுப்பப்பட்டுள்ளன. கடந்த மார்ச் மாதத்தில் இருந்து சுமார் 6-7 மாதங்களாக இவை சபாநாயகரின் அலுவலகத்திலேயே முடங்கிக் கிடக்கின்றன. இதற்கான காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை" என அவர் குறிப்பிட்டார்.

மேலும், "இந்த மனுக்களுக்கு என்ன நடந்தது என்று பொது மக்கள் என்னிடம் தொடர்ந்து கேள்வி எழுப்பி வருகிறார்கள். அவர்களுக்கு நான் என்ன பதில் சொல்வது?" என தயாசிறி ஜயசேகர கேள்வி எழுப்பினார்.

இதனைத் தொடர்ந்து சபையில் பதிலளித்த சபாநாயகர், குறித்த மனுக்கள் ஏன் இன்னும் கையெழுத்திடப்படாமல் தாமதமாகி வருகின்றன என்பது குறித்து தான் உடனடியாகக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வடக்கு-கிழக்கில் அரச உதவியுடன் அழிக்கப்படும் இயற்கை வளங்கள்!

## சத்தியலிங்கம் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 26

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய அரசாங்கம் அபிவிருத்தி என்று குறிப்பிட்டுக் கொண்டு ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகளை அழித்து சுற்றுச்சூழல்களுக்கு எதிராக செயற்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரச அனுசரணையுடன் இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் குற்றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் தேசிய சூழல் (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த அரசாங்கமும் சுற்றுச்சூழலுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பங்கள் உள்ளன. அதாவது எமது மாவட்டத்தில் குடியேற்றப்பட்ட மக்களின் நீர் தேவைக்காக ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகளை அழித்து ஆறாயிரம் குடும்பங்களுக்கு நீர் வழங்குவதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுத்தப்படவில்லையா? சுற்றுச்சூழலை பாதுகாக்கவேண்டிய அரசாங்கமே அபிவிருத்தி என்ற பெயரில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காடுகளை அழிக்கும் செயற்பாடுகளை செய்கின்றது.

வவுனியா பம்பைமடு என்ற பிரதேசத்தில் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் வனவளத் திணைக்கள அலுவலகம் உள்ள பிரதேசத்தில் 40 ஏக்கருக்கும் மேலான அடர்ந்த ஒதுக்குக்காடு சுத்தம் செய்யப்பட்டு அங்குள்ள மரங்கள் கடத்தப்பட்டுள்ளன. வனவள திணைக்கள அதிகாரிகள் ஊழலில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள் ஒருபக்கம் நடந்துகொண்டிருக்கையில் வடக்கு-கிழக்கு முழுவதும் கனிய மண்ணை அகழ்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படவில்லையா? அதேபோன்று எமது வீதிகளில் வெள்ளையர்களால் நடப்பட்ட பல நூறு வயதுடைய மரங்கள் எவ்வித காரணங்களும் இன்றி வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வெட்டி அகற்றப்படுகின்றன. இவ்வாறு வெட்டப்பட்ட மரங்களுக்கு மாற்றீடாக ஒரு மரமும் நடப்படவில்லை. இது சுற்றுச்சூழல் பாதிப்பு இல்லையா?

இது மட்டுமன்றி எமது பிரதேசங்களில் மணல் அகழ்வு, கல் அகழ்வு, கனியவள அகழ்வு சட்டத்திற்கு புறம்பாக நடக்கின்றது. சட்டத்தில் உள்ளவாறு அவற்றை எடுத்தவர்கள் அங்கு செய்ய வேண்டியவற்றை செய்வதில்லை. அதனை கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை-என்றார்.

(அ)

# உயர்தரப் பரீட்சைகள் திட்டமிட்டபடி நடக்கும்

## கல்வி அமைச்சு மீண்டும் அறிவிப்பு

கொழும்பு, ஜூன். 26

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகள் தொடர்பில் சிலரால் திட்டமிட்டு வதந்திகள் பரப்பப்படுகின்றன. இதனால் மாணவர்கள் மத்தியில் குழப்பங்கள் ஏற்படக் கூடும். எனவே ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள மைக்கமைய ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி நிச்சயம் பரீட்சைகள் ஆரம்பமாகும் என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ மீண்டும் உறுதியாகக் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


அவர் மேலும் குறிப்பிடுகையில்-

ஓகஸ்ட் 10ஆம் திகதி பரீட்சைகளை நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதில் எவ்வித மாற்றங்களும் இல்லை. சிலரால் இந்த திகதிகள் குறித்து திட்டமிட்டு வதந்திகள் பரப்பப்படுகின்றன. அவை தொடர்பில் மாணவர்கள் பதற்றமடையவோ குழப்பமடையவோ தேவையில்லை. அதேநேரம் பரீட்சைகளைக் காலம் தாழ்த்துவதற்கு எந்தவொரு தகுதியான காரணமோ அல்லது தேவையோ கல்வி அமைச்சுக்கு இல்லை.

பாடசாலை நாள்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு தான் பரீட்சைகளுக்கான கால அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் 243 பாடசாலை நாள்களின் அடிப்படையிலேயே கால அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் முறை பரீட்சை எழுதும் மாணவர்களுக்கும் சுமார் 5 மாதங்கள் தயாராவதற்கான காலம் காணப்படுகிறது. எனவே அதிலும் எவ்வித சிக்கலும் இல்லை. எனவே பரீட்சைகளை நடத்தி முடிப்பதற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்-என்றார்.

(அ)

# அல்-பஹ்ரியா மகாவித்தியாலய 78 ஆவது ஆண்டு நிறைவு விழா



அம்பாறை, ஜூன். 26

கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலயத்தின் 78ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நினைவு நிகழ்வுகள் நேற்று பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைசால் தலைமையில் பாடசாலை வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றன.

பாடசாலையின் வரலாற்றுப் பயணத்தையும் கல்விச் சாதனைகளையும் நினைவுகூரும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாடசாலையின் 78 ஆண்டுகால கல்விச் சேவையை நினைவு கூரும் வகையில் பாடசாலை வரலாற்றை உள்ளடக்கி ஆசிரியர் எம்.வை.எம்.வை. இம்ரானால் தொகுக்கப்பட்ட புத்தக வெளியீடும், நினைவு மரம் நடும் நிகழ்வும் நடைபெற்றது. எதிர்கால தலைமுறையினருக்கான பொறுப்புணர்வையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் அவசியத்தையும் வலியுறுத்தும் நோக்கில் இந்த மரநடுகை முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை கல்வி வலய பிரதிக்கல்வி பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபீர், பாடசாலைக்கான வலய இணைப்பாளர் ஜெஸ்மி மூஸா, அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளர் யூ.எல். நூருல் ஹுதா, கல்முனை பிர்லியண்ட் விளையாட்டுக்கழக தலைவர் எஸ்.எம். ஹாஜா, பயிற்றுவிப்பாளர் யூ.எல். பழீல், பழைய மாணவர்கள் சங்க செயலாளர் யூ.எல்.எம். ஹாஜா உட்பட பழைய மாணவர்கள் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவினர், கல்முனை பிர்லியண்ட் விளையாட்டுக்கழகத்தினர், பழைய மாணவிகள் சங்கத்தினர் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# 26 பில்லியன் ரூபா பெறுமதியுள்ள போதைப்பொருள் இதுவரை மீட்பு!

## நீதிமன்றத்துக்குள் நடந்த ஊழல்களையும் அம்பலப்படுத்தினார் அமைச்சர் ஆனந்த

கொழும்பு, ஜூன். 26

போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட பாரிய சோதனைகளின் விவரங்களை மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

2025 ஆம் ஆண்டு முதல் இதுவரை 226 பில்லியன் ரூபாவுக்கும் அதிக மதிப்புள்ள போதைப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட அமைச்சர், நீதிமன்ற மற்றும் பாதுகாப்புத் துறையினருக்குள் மறைந்திருந்த சில ஊழல்களையும் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டில் மாத்திரம் சுமார் 54,000 மில்லியன் ரூபா மதிப்புள்ள போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன. இந்த நடவடிக்கை 2026 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும் தீவிரமாகத் தொடர்ந்ததால், மொத்த போதைப்பொருள்களின் சந்தை மதிப்பு 226,447 மில்லியன் ரூபாவை எட்டியுள்ளது. கடற்படை மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் பெரும்பாலும் கடல் எல்லைகளிலேயே இவை முறியடிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தின் சான்றுப் பொருள்கள் காப்பகத்தில் இருந்த 750 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை, அங்கிருந்த அதிகாரியே திருடி விற்ற சம்பவத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், கடந்த 2025 ஜூலை 28 அன்று அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர், சோதனையின் கீழ் தன் வசம் வைக்கப்பட்டிருந்த 250 கிராம் "ஐஸ்" போதைப்பொருளை மீண்டும் விற்பனைக்காகக் கடத்த முயன்றபோது கைது செய்யப்பட்டதாக அமைச்சர் அதிரடி தகவலை வெளியிட்டார்.

போதைப்பொருள் வலையமைப்பை ஒழிப்பதற்காகத் தகவலாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடத்தல்காரர்கள் பற்றிய விபரங்களை வழங்கிய பொதுமக்கள் மற்றும் சோதனைகளில் ஈடுபட்ட காவல்துறையினர் , கடற்படையினருக்கு 785 மில்லியன் ரூபாவிற்கும் அதிக தொகை பணப் பரிசாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நீதிமன்ற தீர்ப்புகளுக்காகக் காத்திருக்கும் 8,554 கிலோகிராம் போதைப்பொருள்கள், சிசிரிவி கமெராக்கள் மற்றும் நான்கு பூட்டுகளைக் கொண்ட இரும்புப் பட்டிகளால் மூடப்பட்ட அறைகளில் தீவிரமாகப் பாதுகாக்கப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

# சட்ட திருத்தம் நிறைவேற்றப்பட்டவுடன் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறுகிறார்


கொழும்பு, ஜூன். 26

மாகாண சபைகள் தேர்தல் தொடர்பான சட்டத் திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உடன் மாகாணசபைத் தேர்தலை நடத்துவோம்.இந்தத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம் என ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற அமர்வின்போது ஒழுங்குப் பிரச்னையை முன்வைத்து உரையாற்றிய எதிரக்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை உடன் நடத்த வேண்டும். அப்போது மக்களாணையின் உறுதிப்பாட்டை விளங்கிக் கொள்ளலாம்-என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்து உரையாற்றிய ஆளுங் கட்சியின் பிரதம கொறடாவான நளிந்த ஜயதிஸ்ஸ,மாகாண சபைத் தேர்தல் குறித்து பாராளுமன்ற விசேட செயற்குழு ஆராய்கிறது. மாகாண சபைத் தேர்தல் சட்டத்திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டவுடன் மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்துவோம்-என்றார்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பயங்கரவாத சட்டத்துக்கு...

கொண்டு ஒடுக்கப்படும்.

குற்றங்களை ஒடுக்குவதில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஷானி அபேசேகர பெரும் பங்காற்றி வருவதாகவும், இன்று அவர் எதிர்க்கட்சியின் எதிரியாக மாறியுள்ளார்.

இலஞ்ச ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், அமைச்சர் ஆனந்த விஜேபால, சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் திலீப பீரிஸ் மற்றும் நீதிமன்றமும் இன்று எதிர்க்கட்சியின் எதிரிகளாக மாறியுள்ளனர்.

அரசுக்குள்ளே இருந்து கொண்டு, அரச அனுசரணையுடன் குற்றங்கள் இழைக்கப்பட்டிருந்தால், அந்த குற்றவாளிகளை வெளிப்படுத்தக் கூடாதா? அது நாட்டை காட்டிக் கொடுப்பதா? அது தேசத்துரோகமா? இல்லை, அது ஒரு நாகரீகமான அரசை கட்டியெழுப்பும் நோக்கமாகும். எமது அரசை நாம் ஒரு நாகரீகமான அரசாக மாற்ற வேண்டும்.

நமது நாடு ஒரு ஊழல் நிறைந்த அரசாக இருந்தது. எமது இராணுவம், புலனாய்வுப் பிரிவினர் மீதான கௌரவம், பாராட்டு மற்றும் விசுவாசம் எமக்கு உள்ளது. எமது இராணுவமும் புலனாய்வுப் பிரிவினரும் நாட்டின் பாதுகாப்புக்காகவும், மக்களின் பாதுகாப்புக்காகவும் அர்ப்பணிப்புடன் செயலாற்றும்போது, அவர்கள் எங்கேனும் அநீதிக்குள்ளானால் நாம் அவர்களுக்காக முன்னிற்போம்.

ஆனால், இராணுவத்திலோ அல்லது புலனாய்வுப் பிரிவிலோ உள்ள ஒரு சிறிய குழுவினர், ஏதேனும் ஒரு குடும்பத்தின் அதிகாரத்துக்காக அல்லது ஒரு அரசியல் முகாமின் அதிகாரத்துக்காக அரச தேவையின் பேரில் குற்றங்களைச் செய்திருந்தால், அவர்களுக்குரிய தண்டனையை வழங்க எமது அரசாங்கம் தயங்காது.

தங்கள் அதிகாரத்துக்காக, ஒரு குடும்பத்தின் மற்றும் தங்கள் அரசியல் முகாமின் அதிகாரத்துக்காகச் செய்யப்பட்ட குற்றங்களான தாஜூதீன் விவகாரமும் அப்படித்தான், ஈஸ்டர் தாக்குதலும் அப்படித்தான்... இவற்றின் பின்னணியில் மிகச் சிறிய அரச இயந்திரத்தின் இயக்குநர்கள் இருந்தனர்.

இதனை நாட்டுக்கு வெளிப்படுத்தக் கூடாதா? நாட்டில் வெள்ளை வான் பயம் இருக்கவில்லையா? இலக்கத் தகடுகள் இல்லாத வெள்ளை வான்களில் வந்து, தங்கள் காணியில் வீட்டை உடைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மனிதர்களைக் கடத்தினார்கள். இவை சிவில் மோதல்கள் அல்ல. ஒரு சிறிய குழுவினர் தங்களின் அரசியல் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு இக்கொடூரக் கொலைகள் செய்யப்பட்டுள்ளன. இந்த காட்டுமிராண்டித்தனமான குற்றங்களுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்த நாம் நிச்சயமாகக் கடமைப்பட்டுள்ளோம்.

இதற்கு விபரீதமாக அல்லது எதிராகச் செயற்படக்கூடியவர்கள் இக்குற்றங்களினால் லாபம் ஈட்டியவர்கள் மாத்திரமே, விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளை யாராவது அச்சுறுத்தினால் அல்லது அழுத்தம் கொடுத்தால், அரசாங்கம் அவர்கள் சார்பில் முன்னிற்கும் என்றும், பொது மக்களும் அவர்களுக்காக முன்வர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பணம் நாட்டிலிருந்து வெளியே கடத்தப்பட்டுள்ளது. அவை இன்று வெளிச்சத்திற்கு வந்துள்ளன. சிலரை நாம் கைது செய்துள்ளோம். விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஊழல் மூலம் ஈட்டப்பட்ட செல்வமே டொலர்கள் ஊடாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளது. இலங்கைக்குள் அது ரூபாய்களாக இருக்கலாம், ஆனால் நாட்டிலிருந்து கடத்தப்பட்டது டொலர் வடிவத்திலாகும்.

எவருக்கும் தனிப்பட்ட பழிவாங்கும் எண்ணமோ, குரோதத்தைத் தீர்த்துக்கொள்ளும் தேவையோ எமக்குக் கிடையாது. இது பழிவாங்கல் அல்ல. போதைப்பொருள் பணம், குற்றவாளிகளின் பணம், ஊழல் மூலம் ஈட்டப்பட்ட பணம் என அனைத்தும் ரி.ரி.(Telegraphic Transfer) ஊடாகவே சென்றுள்ளன.

சிலர் தங்களது உயிரைப் பணயம் வைத்தே இந்த விசாரணைகளை மேற்கொள்கின்றனர். அவர்களுக்கு எனது நன்றிகள். அதற்கமைய, பெருமளவிலானோருக்கு நாம் பிடியாணை பெற்றுள்ளோம். பெருமளவிலானோர் நீதிமன்றத்தை எதிர்கொள்ள முடியாமல் தப்பியோடியுள்ளனர். குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு தங்களைப் பற்றிய தரவுகளை நீதிமன்றத்தில் முறையாக முன்வைத்து, விடுதலையாவதற்கான உரிமை உண்டு.

மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டம் இந்த ஆண்டுக்குள், அதாவது இன்னும் சில மாதங்களுக்குள் ரத்து செய்யப்படும்.

நீண்ட காலமாக விமர்சனங்களுக்கு உள்ளாகி வரும் இந்தச் சட்டத்தை நீக்கி, ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் புதிய சட்டக் கட்டமைப்பை உருவாக்குவதே தமது அரசாங்கத்தின் இலக்கு.

அத்துடன், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுப்பதற்காக மிகவும் வலுவான புதிய சட்டமொன்றை உருவாக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது-என்றார். (அ)

## தனது பொறுப்பில்...

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நிதிக்குழு முன்னிலையில் வெளியிட்ட இந்த அறிக்கை தொடர்பில், நேற்று பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் கருத்து வெளியிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

“வெளிநாட்டு கடன்களை செலுத்தும் போது, அது தவறான கணக்கொன்றுக்கு சென்றமை தொடர்பில் விசாரணை நடத்தப்படும்போது, இந்த விவகாரத்துக்கு நாங்கள் பொறுப்பல்ல என்று மத்திய வங்கியின் ஆளுநர் நிதிக்குழுவில் கூறுகின்றார். நிதி பரிமாற்ற ஒழுங்குமுறை சட்டத்திற்கு பொறுப்பு கூறவேண்டிய அவசியமில்லை என்றும் அவர் கூறினார்.

அதனை சட்டமா அதிபர் திணைக்களமும் அங்கீகரித்துள்ளது. பணத்தை அனுப்பும் போது, அந்த சட்டத்தின் பிரிவின் கீழ் அனைத்து நிறுவனங்களும் பொறுப்பு கூற வேண்டும் என்று நான் கூறினேன். நிதி பரிமாற்ற சட்டம் மிகவும் தெளிவாக உள்ளது” என அவர் தெரிவித்தார். (அ)

## இன்னும் எத்தனை...

எத்தனை நாள்கள் நாங்கள் நீதிக்காக காத்திருப்பது?. உறவுகளின் போராட்டத்தை அரசியல் என்று கருதவேண்டாம். அது அவர்களின் ஆதங்கம் மற்றும் எதிர்பார்ப்பு என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நீதி அமைச்சரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது நிலையியல் கட்டளையின் கீழ் கேள்விகளை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் நீதி அமைச்சர்களான அலி சப்ரி, விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு வந்து மக்களை சந்தித்து வாக்குறுதிகளை வழங்கினார்கள். ஆனால் ஏதும் நிறைவேறவில்லை. நீதியமைச்சர் கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகைத் தந்திருந்தார் செம்மணி மனித புதைகுழி பகுதிக்கு நேரடியாக சென்று பார்வையிட்டார்.

அதன்போது பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அந்த போரட்டத்தின் பின்னணியில் அரசியல் நோக்கம் உள்ளது என்று குறிப்பிட கூடாது. அது பாதிக்கப்பட்டுள்ள மக்களின் ஆதங்கம் மற்றும் எதிர்பார்ப்பின் வெளிப்பாடாகும்.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் முன்வைத்த கேள்விகளுக்கு தற்போது தான் முழுமையான பதில் அளிக்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறேன். அகழ்வாராய்ச்சி பணிகளுக்கு அரசாங்கம் நிதி ஒதுக்கியுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். இதுவரையில் 412 எலும்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதில் 409 எலும்புக்கூடுகள் முழுமையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, முழுமையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள 409 எலும்புக்கூடுகள் தொடர்பான விசாரணைகளை விரைவுப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். இன்னும் எத்தனை நாட்கள் நாங்கள் நீதிக்காக காத்திருப்பது.

1996ஆம் ஆண்டுக்கு முன்னரும் இந்த பகுதியில் மனித உடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. கடற்படையின் அதிகாரிகள் தொடர்பிலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது- என்றார். (அ)

## இலங்கையில் உணவு...

மத்திய கிழக்கு நெருக்கடியின் பக்கவிளைவுகளால் தங்களின் அடிப்படை உணவுத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் கடுமையான பட்டினி நிலைக்கு தள்ளப்படக் கூடிய நாடுகளின் வரிசையில் இலங்கை மூன்றாம் இடத்தில் உள்ளது.

குறித்த பட்டியலில், ஆப்கானிஸ்தான் முதலிடத்திலும், சோமாலியா இரண்டாவது இடத்திலும் உள்ளன.

இந்த நிலைமை காரணமாக உலகளாவிய ரீதியில் மேலும் 45 மில்லியன் மக்கள் வரை இவ்வாறான உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய ஆபத்தில் உள்ளதாக உலக உணவுத் திட்டம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

## செம்மணி புதைகுழி...

செம்மணி மனித புதைகுழி விவகாரம் தொடர்பாக எதனையும் மறைக்கவும் எவரையும் பாதுகாக்கவும் வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இல்லை. செம்மணி விவகாரம் குறித்து சர்வதேச ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வோம். அத்தோடு, உண்மையை வெளிப்படுத்துவோம்-என்றார். (அ)

## அரசியல் பலத்தை...

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது மாகாண சபைத் தேர்தல்கள் என்பது முற்றிலும் இல்லாது போயுள்ளதுடன், அது ஒரு அற்றுப் போன நிலையை அடைந்துள்ளது. மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாகச் சிலவேளைகளில் 2029 ஆம் ஆண்டு அடுத்த தேசிய தேர்தல்களான ஜனாதிபதித் தேர்தலோ அல்லது பாராளுமன்றத் தேர்தலோ முதலில் நடத்தப்படலாம். எனவே, மாகாண சபைத் தேர்தல்கள் தற்போதைய சூழலில் நடத்தப்படும் சாத்தியக்கூறுகள் எவருக்கும் புலப்படவில்லை என்றே கூற வேண்டும்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் அரசியல் தரப்பினர் கூட, மாகாண சபைகளின் சாதாரண அரசியல் இயக்கத்துக்காகவும் தங்களின் அரசியல் இருப்பிற்காகவுமே அதனைச் செய்கிறார்களே தவிர, மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டதன் உண்மையான நோக்கமான அதிகாரப் பகிர்வுக்காக எதிர்க்கட்சிகள் இதனைக் கோரவில்லை. அவர்கள் தங்களது தற்போதைய அரசியல் பலத்தை மக்கள் மத்தியில் நிரூபித்துக் காட்டுவதற்காகவே மாகாண சபைத் தேர்தலை ஒரு கருவியாகப் பயன்படுத்தக் கோருகின்றனர்.

உண்மையைக் கூறின், இந்த அதிகாரப் பகிர்வுக்கான தேவையையும் அதற்கான உண்மையான கோரிக்கையையும் வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிலாளர்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சில அரசியல் கட்சிகள் மாத்திரமே கொள்கை ரீதியாகக் கொண்டுள்ளன. ஏனைய பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் கொள்கை ரீதியாக மாகாண சபை முறையை ஏற்றுக்கொள்ளாமல், அதனை மற்றொரு தேர்தலாக மட்டுமே பார்க்கின்றன.

எனவே, மாகாண சபைத் தேர்தல் தற்போதைய சூழலில் நடத்தப்பட்டாலும் கூட, அது மாகாண சபை என்ற உண்மையான கோட்பாட்டுகோ அல்லது அதிகாரப் பகிர்வு என்ற நோக்கத்துக்கோ எவ்வித பயனையும் அளிக்கப் போவதில்லை என்பதுடன், அதனை மேம்படுத்தும் வகையிலும் அமையாது என்றே நான் திடமாக நம்புகிறேன்-என்றார். (அ)

## மூத்த ஊடகர்...

வெளியீடான தினகரன் பத்திரிகையில் பருத்தித்துறை குறுப் நிருபராக இணைந்து கொண்டார்.

தொடர்ந்து 1977 ஜூன் மாதம் முதல் ஈழநாடு பத்திரிகையில் இணைந்து கொண்டார். இவ்விரு நிறுவனங்களின் செய்தியாளராகப் பணியாற்றியதோடு பின்நாளில் கொழும்பு, யாழ். தினக்குரல் பத்திரிகையின் பருத்தித்துறை நிருபராகவும் பணிபுரிந்தார். சில காலம் யாழ். தினக்குரலிலும் உதவி ஆசிரிராகப் பணியாற்றி இருந்து வந்தார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் பொது நூலகராக கடமையாற்றிய அவர் கலாபூஷணம், கலைப்பருதி உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

சுமார் 45 ஆண்டு காலம் பத்திரிகைச் செய்தியாளராகப் பணியாற்றிய அமரர் திருச்செல்வம் கடந்த ஐந்து வருடங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார்.

இவர் தனது சேவைக்காலத்தில் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும், செயலாளராகவும் சில ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

பருத்தித்துறை வராத்துப்பளையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் நீண்ட காலமாக புலோலி புற்றளையை வசிப்பிடமாகக் கொண்டிருந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும். (அ)

## சர்வதேச சந்தையில்...

பிரேமதாஸ விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

டீசலுக்கு 100 ரூபாவும், பெற்றோலு க்கு 20 ரூபாவும் மானியம் வழங்கப்படுகி றது. இந்த எரிபொருள் மானியம் அனை வருக்கும் சமமான முறையில் வழங்கப்படுவதில்லை.

தற்போது மானியங்களுக்காக அமைச்சரவையினால் 57 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இந்தத் தொகை இன்னும் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

எரிபொருள் விலைகளில் எப்போது மாற்றம் செய்யப்படும் என்று தற்போதைக்குக் கூற முடியாது. உலகச் சந்தையின் விலை நிலவரங்களுக்கு அமைவாகவே அது தீர்மானிக்கப்படும்.

அத்துடன், கடந்த மார்ச் மாதம் முதல் எரிபொருள் விலைகள் அதிகரித்து வந்துள்ளன-என்றார். (அ)

## போதைப்பொருள்...

அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் உரையாற்றுகையில்,

“நாட்டில் இருந்து போதைப்பொருளை முற்றாக ஒழிக்கும் கொள்கையில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியாக நிற்கிறது.

இவ்வாறான குற்றங்களுடன் தொடர்புடைய எவருக்கும் எமது கட்சியில் இடமில்லை. போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் முட்டுக்கட்டையாக இருப்பதாக ஜனாதிபதி கூறுவதை நாம் நிராகரிக்கிறோம். போதைப்பொருளை ஒழிப்பதற்கு நீதியும் சட்டத்தின் ஆட்சியும் நிலைநாட்டப்பட வேண்டும்.”எனத் தெரிவித்தார்.

தற்போதைய போதைப்பொருள் அச்சுறுத்தல் பாடசாலைக் கட்டமைப்பு மற்றும் இளைய தலைமுறையினரைக் கடுமையாகப் பாதித்துள்ளதாகச் சுட்டிக்காட்டிய சஜித், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் கைது செய்யப்பட்டு, மக்களின் வரிப்பணத்தில் சிறையில் அடைக்கப்படும் அதே வேளை, அவர்கள் சிறையிலிருந்தபடி தங்களது கடத்தல் வலையமைப்பைத் தொடர்ந்து இயக்குவதற்கு இடமளிக்கக் கூடாது என எச்சரித்தார்.

இவ்வாறான போதைப்பொருள் கடத்தல்களைத் தடுப்பதற்குச் சிங்கப்பூரில் உள்ளதைப் போன்ற கடுமையான தண்டனை முறைகளை இலங்கையில் இப்போது செயல்படுத்த வேண்டியது அவசியமாகும் என்றும், போதைப்பொருளை ஒழிப்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பும் எதிர்க்கட்சியின் கோரிக்கையுமாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## வேலையற்ற பட்டதாரிகள்...

அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் வேலைவாய்பு போட்டி பரீட்சையில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் அரசாங்கத்துக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் வடக்கு மாகாணத்தில் பல வேலை வாய்ப்பு வெற்றிடங்கள் காணப்படும் நிலையில் அவற்றுக்கு பட்டதாரிகளை உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்க ப்பட வேண்டும் எனக் கோரியும், அரசாங்கத்தால் மேற் கொள்ளப்படும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்க வேண்டும் எனக் கோரியுமே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


தமக்கான தீர்வுகள் கிடைக்க பெறாமல் விடின் எதிர்காலத்தில் தொடர் போராட்டங்களை முன்னெடுப்போம் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# பழிவாங்கும் அரசியலை முன்னெடுக்கிறது அரசு!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன். 26

நாட்டில் இன்று ஜனநாயாக அரசியல் முற்றிலும் சீரழிந்து, வெறுப்பு மற்றும் பழிவாங்கும் அரசியலே முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்களுடனான சந்திப்பின்போது, நாட்டின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் குறித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் தனக்கு எதிரான அரசியல் சக்திகளை எதிரிகளாகக் கருதிச் செயல்படுகிறது. உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் தற்போதைய அரசாங்கம் அரசியல் நாடகமாடுகிறது. அன்று ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான புலனாய்வு அறிக்கைகளை மறைத்து வைத்திருந்த அதிகாரிகளுக்கு இன்று பதவி உயர்வுகளும் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. ஆனால், நாட்டுக்காக உண்மைகளைக் கண்டறிந்து தகவல்களை வழங்கிய சிவில் சமூகத்தினரும், நேர்மையான புலனாய்வு அதிகாரிகளும் சிறையிலடைக்கப்பட்டு பழிவாங்கப்படுகிறார்கள்.

மேலும், கேகாலை போன்ற பகுதிகளில் அரசாங்கத்துக்கு எதிராகச் செயல்படும் இளைஞர்களைப் பழிவாங்கும் நோக்கில், பொலிஸாரைப் பயன்படுத்தி அவர்கள் மீது போதைப்பொருள் வழக்குகளைப் ஜோடிப்பதற்கு திட்டமிட்ட சதி முயற்சிகள் நடக்கிறது.

விவசாயிகளுக்குத் தேவையான உரம் முறையாக வழங்கப்படுவதில்லை. அத்துடன், அவர்கள் கஷ்டப்பட்டுப் பெற்ற நெல் அறுவடை க்கு முறையான விலையும் நிர்ணயிக்கப்படவில்லை. உள்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை அழிக்கும் வகையில், அறுவடை காலங்களில் வெளிநாட்டிலிருந்து காய்கறிகளையும் பழங்களையும் இறக்குமதி செய்யும் கொள்கை யையே அரசாங்கம் பின்பற்றி வருகிறது. தற்போதைய எரிபொ ருள் விலை உயர்வால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்க ளுக்கு முறையான எரிபொருள் மானியம் வழங்கப்படாவிட்டால், ஒட்டுமொத்த மீனவ சமூகமும் இத்தொழிலை விட்டு வெளியே றும் அபாயம் ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

# உலக வங்கியின் இரு திட்டங்கள் ஆளுநர் தலைமையில் ஆராய்வு



யாழ்ப்பாணம், ஜூன். 26

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள இரண்டு பிரதான செயற்திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் மற்றும் அதற்கான கால அட்டவணை தொடர்பில் ஆராயும் விசேட சந்திப்பொன்று, வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையிலான குழுவினருக்கும் உலக வங்கிப் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை நடைபெற்றது.

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் "நிவைவ்" திட்டத்தின் கீழ், வடக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக யாழ்ப்பாணத்தில் உள்ள குருநகர் இறங்குதுறை மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணக் கோட்டை ஆகிய இரு இடங்களையும் மையப்படுத்திய ஒருங்கிணைந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நேற்றைய இச்சந்திப்பின்போது, ஏற்கனவே உலக வங்கியால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த இரண்டு திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் களமட்டத்தில் எவ்வாறு அமையவுள்ளது என்பது தொடர்பிலும், அதற்கான வேலைத்திட்டக் கால அட்டவணை தொடர்பிலும் ஆளுநர் தலைமையிலான குழுவினருக்கு உலக வங்கிக் குழுவினர் விரிவாக விளக்கமளித்தனர்.

இந்த முக்கிய கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர். (அ)

# கட்டைக்காடு பகுதியில் சுருக்குவலை பறிமுதல்

யாழ்ப்பாணம், ஜூன். 26

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில், சட்டவிரோதமாக ஒளி பாய்ச்சி மீன்பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை, சட்டவிரோத சுருக்குவலை ஒன்று பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சட்டவிரோத செயற்பாடுகளை ஒடுக்கும் முயற்சியில், வெற்றிலைக்கேணி கடற்படையினர் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன் தினம் மாலை கட்டைக்காடு கடற்கரையில் ஒளி பாய்ச்சி மீன்பிடிக்க உதவியாக, மிக இரகசியமாக கொண்டு செல்லப்பட்டு, கடற்கரையில் மறைத்து வைக்கப்பட்ட சுருக்குவலை, கடற்படையின் விசேட தேடுதல் நடவடிக்கை மூலம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட சுருக்குவலை, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக, யாழ்ப்பாணம் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ)

# ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

முல்லைத்தீவு, ஜூன். 26

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டமானது நாளை சனிக்கிழமை கோலாகலமாக நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க திருவருள்மிகு பூலோகநாயகி உடனுறை வேகாவனேஸ்வரர் (தான்தோன்றீஸ்வரர்) தேவஸ்தானத்தில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள சித்திரத் தேரின் வெள்ளோட்டத் திருவிழா மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பு ஆகியன நாளை சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஆலயத்தில் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

இத்திருவிழாவோடு இணைந்து, இந்த ரதத்தை வடிவமைத்த சிற்பக் கலைஞர்களைக் கௌரவிக்கும் விசேட நிகழ்வும் இடம்பெறவிருக்கிறது. (அ)

# வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் பணிப்பாளராக திருமதி தட்ஷாஜினி

வவுனியா, ஜூன். 26

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் புதிய வலயக் கல்விப் பணிப்பாளராக திருமதி தட்ஷாஜினி வஜிகரன் நேற்று முன் தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதுவரை காலம் வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த அவர், தற்போது கல்வி நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக வலயக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்தே, அவர் நேற்று முன் தினம் வவுனியா வடக்கு கல்வி வலய அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாகத் தனது புதிய பதவியை ஏற்றுக்கொண்டார். (அ)

# வருடாந்த பஸ் கட்டண திருத்தம் ஜூலை 1 முதல் அமுல்படுத்துக!

கொழும்பு, ஜூன். 26

ஆண்டு தோறும் அமுல்படுத்தப்படும் பஸ் கட்டணத் திருத்தத்தை ஜூலை முதலாம் திகதி முதல் அமுல்படுத்தக் கோரி, தனியார் பஸ் சங்கங்கள் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இக்கோரிக்கையை எழுத்துபூர்வமாக கையளித்ததாக, இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

அதன்படி, அடுத்த 5 நாள்களுக்குள் கட்டணத் திருத்தம் தொடர்பாக தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவுடன் கலந்துரையாடல்களை நடத்த எதிர்பார்ப்பதாக கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்-

ஆண்டு தோறும் அமுல்படுத்தப்படும் பஸ் கட்டணத் திருத்தம் 5 ஆம் திகதி செயல்படுத்தப்படும் என நாங்கள் முன்னதாக அறிவித்திருந்தோம். இந்த மாத இறுதியில் வரவிருக்கும் எரிபொருள் விலை மாற்றத்தை பரிசீலித்த பிறகு, எங்களின் அனைத்து சங்கங்களுடனும் கலந்துரையாடி, அவர்களின் ஒப்புதலைப் பெற்று, பஸ் கட்டணத்தை வழக்கம் போல் ஜூலை முதலாம் திகதி திருத்தியமைக்க எழுத்துபூர்வ அறிவிப்பை வெளியிட முடிவு செய்தோம். மேலும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடனும் இந்த 5 நாள்களுக்குள் கலந்துரையாட முயற்சி செய்து வருகிறோம். நாங்கள் எங்கள் அனைத்து விலைகளையும் தெரிவித்துவிட்டோம். இருப்பினும், ஜூலை மாதத்தில் செய்யப்படும் திருத்தம் 15 வீதத்திற்கும் அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கிறோம்-என்றார். (அ)

# களப்பணியிலிருந்து விலகிய கிராம உத்தியோகத்தர்கள்!

## 30ஆம் திகதி அடையாள வேலைநிறுத்தம்

கொழும்பு, ஜூன். 26

இலங்கையிலுள்ள கிராம உத்தியோகத்தர்கள் நேற்று முன் தினம் முதல் அனைத்து வகையான களப்பணிகளில் இருந்தும் தற்காலிகமாக விலகியுள்ளதாக கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்கக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அக்கூட்டமைப்பின் தலைவர் நந்தன ரணசிங்க இந்த விவரங்களை வெளியிட்டார்.

பல வருடங்களாக கிராம உத்தியோகத்தர்கள் கோரி வரும் பயணச் செலவுகளுக்கான போதிய எரிபொருள் கொடுப்பனவை வழங்குவது உள்ளிட்ட சில முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தே இந்த களப்பணி புறக்கணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தங்களது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் அல்லது உரிய அதிகாரிகள் முறையான தீர்வை வழங்கத் தவறும் பட்சத்தில், எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சுகவீன விடுமுறையை பதிவு செய்து நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கிராம உத்தியோகத்தர்கள் தங்களது உத்தியோகபூர்வ கடமைகளைச் சரியாக மேற்கொள்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அதிகாரிகள் உடனடியாக அவதானம் செலுத்த வேண்டும் என்றும் இச்சந்திப்பில் தொழிற்சங்கக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது. (அ)

# நாமல் ராஜபக்ஷ மீதான வழக்கு; இந்திய சாட்சிகளுக்கு அழைப்பு

கொழும்பு, ஜூன். 26

இலங்கையில் ரக்பி விளையாட்டை மேம்படுத்துவதாகக் கூறி, இந்திய நிறுவனமான கிரிஷ்லிருந்து 70 மில்லியன் ரூபாயைத் தவறாகப் பயன்படுத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிரான வழக்கில், வெளிநாட்டு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பும் நடைமுறையின்படி, இரண்டு இந்திய சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்புமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நதீ அபர்ண சுவந்துருகொட உத்தரவிட்டார்.

இரண்டு இந்திய சாட்சிகளையும் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று குற்றவியல் புலனாய்வுத் துறை, தெரிவித்ததாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் வசந்த பெரேரா நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் உள்ள தகவலை ஏற்றுக்கொண்ட பின்னர், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அதன்படி, இவ்வழக்கில் ஜூலை 07 அன்று தொடங்கவிருந்த சாட்சிய விசாரணை திகதியை ரத்து செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org